5. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) முதல் துணை நிதிநிலை அறிக்கை, 1986-87வெட்டுத், தீர்மானங்கள் கொடுத்தல்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1986—87 ஆம் ஆண்டிற்கான செலவு குறித்த முதல் துணை நிதி நிலை அறிக்கையில் கண்டுள்ள மானியக் கோரிக்கை களின் மீது வெட்டுத் தீர்மானங்கள் கொடுக்க விரும்பும் உறுப்பினர்கள், அவற்றைப் பேரவையின் 216-வது விதிக்கிணங்க 18-1 -1986 செவ்வாய்க்கிழமை மாலை 3.00 மணிக்குள் பேரவைச் செயலகத்தில் கொடுக்க வேண்டும்.

4. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(ஈ) சென்னை மாநகராட்சி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1986.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவசரச் சட்டத்தை நிராகரிக்கும் தீர்மானத்தை திருவாளர்கள் அ. ரகுமான்கான் ப. பொன்னுரங்கம் ஆகியோர் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் தீர்மானத்தை மொழிவார்.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன்.

''ஆளுநர் அவர்களால் 30—5—1986 ஆம் தேதியன்று பிறப் பிக்கப்பட்ட 1986-ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (இரண்டாம் திருத்த) அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 1/1986) இப்பேரவை நிராகரிக்கிறது.''

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1986—ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு @(சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு 61/1986) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திருவாளர்கள் அ. ரகுமான்கான், ப. பொன்னுரங்கம் ஆகியவர்களின் தீர்மானமும், உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானமும் பேரவை முன் விவாதத்திற்கு வைக்கப் பெறு கின்றன. விவாதத்திலே கலந்து கொள்கின்ற மாண்புமிகு உறுப்பினர்கள் உள்ளாட்சிகள் குறித்த 3 சட்ட முன்வடிவுகளிலும் தங்கள் கருத்துக்களைத்தெரிவிக்க வேண்டுகிறேன்.

---

*14—11—1986 தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.